<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No.22/2022** **நாள்: 02.04.2026** **எ.ம.சா.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **பிரேம்குமார்** | தொழில் | : | Assistant Manager, United India Insurance Company |
| த/பெ | : | ராமசந்திரன் | கிராமம் | : | Coimbatore |
| வயது | : | 49 | தாலுகா | : | Coimbatore |
| | | | மாவட்டம் | : | Coimbatore |

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**

**<u>முதல் விசாரணை -</u>**

நான் இந்த மனுவில் 2வது எதிர்மனுதாரர் நிறுவன தரப்பு சாட்சி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

எ.ம.சா.ஆ.1 – TN 36 B 7197 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் காப்பீடு நகல்

**<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

1. நான் கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் இவ்வழக்கின் ஆவணங்களை சரியாக படித்து பார்த்தேன். இறுதியறிக்கையில் டிரக்டர் மோதி தான் விபத்து ஏற்பட்டது என்று தெரிவித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்வது போல் விபத்தானது டிரெய்லர் மோதி விபத்து ஏற்படவில்லை, டிரக்டர் மோதி தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தப்பட்ட டிரக்டர் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால், நாங்கள் இழப்பீடு செலுத்த கடமைபட்டவர்கள் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.04.02 18:04:53 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.